*செந்தூரன் சுப்பிரமணியம்*

செந்தூரன் சுப்பிரமணியம் தனது பட்டப்படிப்பையும் வேலை பயில்நிலை அநுபவத்தையும் பெற்று சட்டத்துறையில் சேவையாற்ற ஆரம்பித்துள்ள ஒரு இளம் சட்டத்தரணியாவார்.

இவர் 2005ம் ஆண்டில் தனது விஞ்ஞான இளநிலைப் பட்டத்தை (Bachelor of Science Degree) யோர்க் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக் கொண்டார். 2009ல் வின்சர் பல்கலைக்கழகத்தில் இருந்து இவர் வியாபார நிர்வாகத்தில் புலமைப் பட்டத்தையும் (Master of Business Administration Degree) சட்டநீதியியல் கலாநிதி பட்டத்தையும் (Juris Doctor) பெற்றுக் கொண்டார்.

சட்டக்கலாசாலையில் பயிலும் காலகட்டத்தில் இவர் சட்டபீடத்தின் குற்றவியல் சம்பந்தப்பட்ட சட்ட மருத்துவம் (Faculty of Law's legal clinic), நிலக்கிழார் குடியிருப்போர் தகராறுகள், மாகாண குற்ற விசாரணை நீதிமன்றம், சிறுகோரிக்கைகள் நீதிமன்றம் ஆகியவற்றில் தொண்டராக கடமையாற்றி பணியும் புரிந்துள்ளார்.

தன்னுடைய பயில்நிலைக் காலத்தை ஓட்லி, விக்மண்ட் (Oatley, Vigmond) சட்ட நிறுவனத்தில் முடித்ததன் பின் செந்தூரன் ரோஜர் ஓட்லியின் (Roger Oatley) குழுவில் சட்டத்தரணிகளில் ஒருவராக இணைந்தார்.

கனேடிய சட்டத்தரணிகள் சங்கம், ஒன்ராறியோ சட்டத்தரணிகள் சங்கம், ஒன்ராறியோ வழக்கு விசாரணை சட்டத்தரணிகள் சங்கம், ரொறன்ரோ தெற்காசிய சட்டத்தரணிகள் சங்கம் அத்துடன் வழக்குரைஞர் கழகம் ஆகியவற்றில் செந்தூரன் ஒரு அங்கத்தவராக விளங்குகின்றார்.

விபத்துக்களில் கடுமையாகக் காயமடைந்தவர்கள் அல்லது உயிர் இழந்தவர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட வகையில் பிரதிநிதித்துவம் வழங்குவதில் செந்தூரன் சுப்பிரமணியம் தன்னை அர்ப்பணித்துள்ளார். மோட்டார் வாகன விபத்துகள், விபத்து நலன்கள், வாகனத்தில் பயணித்து பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நட்டஈடுகள், பாதகமான மரணம் மற்றும் வைத்திய முறைகேடுகள் ஆகிய வழக்குகளில் கருத்தூன்றி அவரது பணி தொடர்கிறது.

செந்தூரன் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சேவையாற்றுவதில் ஆர்வமாக உள்ளார். குறிப்பாக தமிழ் மக்களுக்கு தன் சேவையை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறார்.